

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** — **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: |
| --- |
| |

**Register Number:** | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

### IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

பகுதி-அ - பொது தமிழ்

Part-A- General Tamil

## 7 ஆம் வகுப்பு - தொகுதி-1

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions | : 1 - 100 | Total Marks | : 150 |

1. தெய்வ நிச்சயம்” முதலாக “போற்றி” ஈறாக உள்ள நாற்பத்து நான்கு தலைப்புகளில், நானூற்று முப்பது பாக்களால் ஆனது ---------------------------
   (A) நளவெண்பா
   (B) பொதுமைவேட்டல்
   (C) யசோதர காவியம்
   (D) பாஞ்சாலி சபதம்

2. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைக் கண்டறிக
   1. திரு.வி.க சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.
   2. பண்ணினை இயற்கை வைத்த பண்பனே போற்றி போற்றி; பெண்மையில் தாய்மை வைத்த பெரியனே போற்றி போற்றி என்ற பாடலைப் பாடியவர் திரு.வி.க
   3. இவர் மேடைத்தமிழுக்கு இலக்கணம் வகுத்தார்.
   4. தமிழ்த்தென்றல் என்ற நூலை எழுதியவர் திரு.வி.க.

   (A) 1, 2, 4 மட்டும் சரி
   (B) 1, 2, 3, 4 சரி
   (C) 2, 3 மட்டும் சரி
   (D) 1, 2, 3 மட்டும் சரி

3. திரு.வி.க அவர்கள் இம்மண்ணுலக வாழ்வை விட்டு மறைந்த நாள் --------
   (A) 17.07.1950
   (B) 17.09.1953
   (C) 17.08.1951
   (D) 17.09.1952

4. எந்நூலைக் கற்பார்க்கு நாடு, மதம், மொழி, இன வேற்றுமைகள் விலகும்; சமுதாய ஒற்றுமை வளரும்; மனித நேயம் மலரும்; உலகம் தழுவிய ஒருமைப்பாட்டுணர்வு உண்டாகும்?
   (A) திருக்குறள்
   (B) சிலப்பதிகாரம்
   (C) பொதுமைவேட்டல்
   (D) உரிமைவேட்கை

5. கிரேக்கம், இலத்தின், சமஸ்கிருதம், சீனம், எபிரேயம், அரபு, ஈப்ரு ஆகியவற்றை செம்மொழிகள் எனப் பட்டியலிடுகிறார் மொழியியல் அறிஞர் ______________

(A) ச. அகத்தியலிங்கம்

(B) மணவை முஸ்தபா

(C) ஈராசுப் பாதிரியார்

(D) டாக்டர் க்ரௌல்

6. உலகில் பழமையான நிலபகுதியான "குமரிக்கண்டத்தில்" தமிழ் தோன்றியது என்பதை "ஒங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ் "இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் -------------------

(A) தொன்னூல் விளக்கம்

(B) தொல்காப்பியம்

(C) புறப்பொருள் வெண்பாமாலை

(D) தண்டியலங்காரம்

7. "தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும்" என்று கூறினார் ---------------------

(A) கால்டுவெல்

(B) பிரான்சிஸ் எல்லிஸ்

(C) ஹோக்கன்

(D) அறிஞர் வில்லியம் ஜோன்ஸ்

8. "தமிழ்மொழி அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்; தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது" என்று மொழிந்து இன்புற்றவர்

(A) அறிஞர் வில்லியம் ஜோன்ஸ்

(B) டாக்டர் கிரௌல்

(C) பிரான்சிஸ் எல்லிஸ்

(D) கால்டுவெல்

9. சரியான கூற்றுகளை ஆராய்க
   1. தமிழில் இடுகுறி பெயர்கள் குறைவு.
   2. தமிழில் உயிர்களுக்கு மட்டுமே பால்வேறுபாடு உண்டு; பொருள்களுக்குப் பால்வேறுபாடு இல்லை.
   3. வடமொழியில் ஒருமை, இருமை, பன்மையென மூவகை எண் உள்ளன.
   4. “எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே” – தொல்காப்பியம்.

   (A) 1, 2, 4 மட்டும் சரி
   (B) 1, 2, 3, 4 சரி
   (C) 2, 3 மட்டும் சரி
   (D) 1, 2, 3 மட்டும் சரி

10. “பட்டி, பாடி” என அழைக்கப்பட்ட ஊர்கள் ------------ நிலத்தின் ஊர்களாகும்.
   (A) நாயக்க மன்னர்கள் ஆண்ட ஊர்கள்
   (B) நெய்தல்
   (C) முல்லை
   (D) குறிஞ்சி

11. நெல்லும் உயிரன்றே; நீரும்உயி ரன்றே;
    மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
    அதனால் யான்உயிர் என்பது அறிகை
    வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே – என்று பாடிய புலவர் யார்?
   (A) ஔவையார்
   (B) நக்கீரனார்
   (C) பொன்முடியார்
   (D) மோசிகீரனார்

12. மரங்கள் சூழ்ந்த பகுதிகளில் மரங்களின் பெயரோடு ஊர் பெயரை சேர்த்து கடம்பூர், கடம்பத்தூர், புளியங்குடி, புளியஞ்சோலை, புளியம்பட்டி என வழங்கப்பட்ட இடங்கள் ------------------நிலங்களாகும்.
   (A) குறிஞ்சி நில ஊர்கள்
   (B) நெய்தல் நில ஊர்கள்
   (C) முல்லை நில ஊர்கள்
   (D) மருத நில ஊர்கள்

13. கால்டுவெல் தமிழகத்தில் வாழ்ந்த இடம் ----------------
   (A) சாயர்புரம்
   (B) இடையான்குடி
   (C) காவல் கிணறு
   (D) கொடைக்கானல்

14. சிறந்ததெனக் கூறப்படும் பத்து பொருள்களைத் தன்னகத்தே கொண்ட நூல் ----------------
(A) பட்டினப்பாலை
(B) முதுமொழிக்காஞ்சி
(C) நற்றிணை
(D) புறநானூறு

15. பின்வரும் எப்புலவரின் பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்கள் மேற்கோள்களாக கையாண்டுள்ளார்கள்?
(A) கோவூர்கிழார்
(B) குடப்புலவியனார்
(C) மோசிகீரனார்
(D) மதுரை கூடலூர் கிழார்

16. எந்நூலின் பாடல்கள் அனைத்தும் ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம் எனத்தொடங்குகிறது?
(A) இன்னா நாற்பது
(B) சிறுபஞ்சமூலம்
(C) திரிகடுகம்
(D) முதுமொழிக் காஞ்சி

17. பொருத்துக:

| | | |
|---|---|---|
| a. நலனுடை மையின் | - | 1. கண்ணஞ்சப் படுதல் |
| b. செற்றாரைச் செறுத்தலில் | - | 2. தற்செய்கை சிறந்தன்று |
| c. இளமையில் சிறந்தன்று | - | 3. மெய்பிணி இன்மை |
| d. காதலில் சிறந்தன்று | - | 4. நாணுச் சிறந்தன்று |

(A) 1 2 4 3
(B) 2 3 1 4
(C) 4 2 3 1
(D) 4 3 1 2

18. தனக்கு உடல்நிலை சரியில்லாத போது சற்று ஓய்வெடுத்தல் நல்லதென்று மற்றவர் கூற, “நோய்க்கு மருந்து இலக்கியம்” என்று கூறியவர்.
(A) திரு.வி.க
(B) மாவித்வான் மீனாட்சி சுந்தரம்
(C) அறிஞர் அண்ணா
(D) உ.வே.சா

19. வல்லினம் மிகும் இடங்களில் சரியானதைக் கண்டறிக
    a. ஓடக் காத்திருக்கிறேன்
    b. காணக் கொடுத்தான்
    c. செய்யச் சொன்னான்
    d. செதுக்கிக் கொடுத்தான்
    (A) a,b,c,d சரி
    (B) b,c,d சரி
    (C) a,b,c சரி
    (D) a,c,d சரி

20. வல்லொற்று மிகும் இடங்களில் சரியானதை கண்டறிக.
    a. ஊன்றிப் படித்தான்
    b. கொட்டிக் கிடக்கிறது
    c. தேடித் திரிந்தான்
    d. தழுவிக் கொண்டான்
    (A) a,b,c சரி
    (B) c,d மட்டும் சரி
    (C) a,b மட்டும் சரி
    (D) a,b,c,d சரி

21. பலவகைப் பண்புகளைக்கொண்டு பெயர்ச்சொற்கள்,வினச்சொற்களை விட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன --------------- சொற்கள்.
    (A) இயற்சொற்கள்
    (B) வினைச்சொற்கள்
    (C) உரிச்சொற்கள்
    (D) இடைச்சொற்கள்

22. முத்துக்கதைகள் என்ற நூலின் ஆசிரியர்------
    (A) நீலவன்
    (B) அரவிந்த் குப்தா
    (C) ராஜம் கிருஷ்ணன்
    (D) அமரேசன்

23. இருபொருள்பட நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர் ----------------.
    (A) அழகிய சொக்கநாதப்புலவர்
    (B) காளமேகப்புலவர்
    (C) இராமச்சந்திர கவிராயர்
    (D) உடுமலை நாராயணகவி

24. “இராமானுஜன் சாதாரண மனிதரல்லர். அவர் இறைவன் தந்த பரிசு” என்று கணிதமேதை இராமானுஜத்தைப் பற்றிக் குறிப்பிட்டவர் யார்?

(A) இலண்டன் ஆளுநர் லார்ட்மென்ட் லண்ட்

(B) ஈ.டி.பெல்

(C) சூலியன் கக்சுலி

(D) இந்திரா காந்தி

25. கற்றதுகைம் மண்ணளவு கல்லா(து) உலகளவென்(று)

உத்தர கலைமடந்தை ஓதுகிறாள் – மெத்த

வெறும்பந் தயம்கூற வேண்டாம் புலவீர்

எறும்புந்தன் கையால்எண் சாண் – என்று பாடிய புலவர் யார்?

(A) சங்கால ஔவையார்

(B) மோசிக்கீரனார்

(C) சங்ககாலத்திற்கு பிற்பட்ட ஔவையார்

(D) கோவூர்கிழார்

26. சரியான கூற்றுகளைக் கண்டறிக

a. எதிர்மறைப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது

b. பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது

c. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகும்

d. காய்ந்த+கட்டை – இச்சொல்லில் வல்லினம் மிகாது

(A) a,b,c சரி

(B) அனைத்தும் சரி

(C) b,d மட்டும் சரி

(D) a,b மட்டும் சரி

27. அறவுரைக்கோவை என்று அழைக்கப்படும் நூல் ----------------

(A) திரிகடுகம்

(B) திருக்குறள்

(C) தனிப்பாடல் தொகுப்பு

(D) முதுமொழிக்காஞ்சி

28. முத்துராமலிங்கத் தேவர் பற்றிய கூற்றுகளில் சரியானவற்றைக் கண்டறிக
    1. முத்துராமலிங்கத் தேவர் 1938,1955 ஆகிய ஆண்டுகளில் இரண்டு முறை பர்மா சென்றார்.
    2. 1952,1957 ஆகிய ஆண்டுகளில் நடந்த சட்டமன்ற,நாடாளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்
    3. 1934 ஆம் ஆண்டு மே 2,3 தேதிகளில் குற்ற பரம்பரை சட்ட எதிர்ப்பு மாநாட்டை நடத்தினார்
    4. 1938 காலக்கட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராக முத்துராமலிங்கத் தேவர் திகழ்ந்தார்.

    (A) அனைத்தும்
    (B) 1, 2, 4 மட்டும்
    (C) 1, 2, 3 மட்டும்
    (D) 2, 4 மட்டும்

29. நாட்டுப்புற இசையின் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதியவர்..............
    (A) பட்டுக்கோட்டை கவிஞர்
    (B) உடுமலை நாராயணகவி
    (C) முடியரசன்
    (D) கண்ணதாசன்

30. சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால் பொருள் வேறுபடும் என்பதை
    “எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
    திரிபும் தத்தமில் சிறிது உளவாகும்”- என்று கூறும் நூல் ............
    (A) தொன்னூல் விளக்கம்
    (B) நன்னூல்
    (C) இலக்கணவிளக்கம்
    (D) தொல்காப்பியம்

31. தொன்மைமிக்க உலக மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை,முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றிருக்கிறது.” – என்று கூறியவர் யார்?
    (A) தேவநேயப் பாவாணர்
    (B) ச.அகத்தியலிங்கம்
    (C) மணவை முஸ்தபா
    (D) டாக்டர் க்ரௌல்

32. எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தென்மொழியாகிய தமிழ் ஒன்றே என்றவர் ----------
   (A) ச.அகத்தியலிங்கம்
   (B) கால்டுவெல்
   (C) பரிதிமாற்கலைஞர்
   (D) வள்ளலார்

33. உலகியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்து இயம்பும் நூல்
   (A) திருக்குறள்
   (B) பொதுமை வேட்டல்
   (C) முதுமொழிக்காஞ்சி
   (D) தனிப்பாடல் திரட்டு

34. எது சான்றோரால் ஆராயப்படும் எனத் திருவள்ளுவர் கூறினார்.
   (A) ஊக்கம் உடையவனிடத்தில் உள்ள செல்வம்
   (B) செவிச்செல்வம் உடையவனிடத்தில் உள்ள கல்வி
   (C) பொறாமை இல்லாதவனிடத்தில் உள்ள செல்வம்
   (D) பொறாமை இல்லாதவனிடத்தில் உள்ள வறுமை

35. சரியான இணைகளைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| 1. சிற்றில் | - | சிறுவீடு |
| 2. யாண்டு | - | எங்கே |
| 3. கல்அளை | - | கற்குகை |
| 4. ஈன்ற வயிறு | - | பெற்றெடுத்த வயிறு |

   (A) அனைத்தும்
   (B) 1, 2, 3
   (C) 2, 3, 4
   (D) 1, 3, 4

36. முத்துராமலிங்கர் முதன்முதலில் உரையாற்றிய இடம் சாயல்குடி. இவர் அங்கு எந்தத் தலைப்பில் உரையாற்றினார்?
   (A) நேதாஜியின் பெருமை
   (B) விவேகானந்தரின் பெருமை
   (C) அம்பேத்கரின் சிறப்புகள்
   (D) மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்

37. முத்துராமலிங்கர் ஆலய நுழைவு போராட்டம் நடத்திய போது அர்ச்சகர்கள் ஆலயப்பணியைப் புறக்கணித்ததால் திருச்சுழியில் இருந்து எத்தனை அர்ச்சகர்களை அழைத்துவந்து போராட்டத்தை வெற்றிபெறச் செய்தார்?
   (A) இரண்டு
   (B) மூன்று
   (C) ஐந்து
   (D) நான்கு

38. அரசின் செயல்களாக திருவள்ளுவர் கூறியதில் சரியான வரிசையைத் தேர்ந்தெடுக்க
   (A) இயற்றல், ஈட்டல், காத்த வகுத்தல், காத்தல்
   (B) ஈட்டல், இயற்றல், காத்த வகுத்தல், காத்தல்
   (C) இயற்றல், காத்த வகுத்தல், ஈட்டல், காத்தல்
   (D) இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த வகுத்தல்

39. பாஞ்சாலங்குறிச்சியில் நீர்நிலையில் ஒரே துறையில் நின்று பால்போன்ற தண்ணீரைக் குடிப்பவை ......., .......
   (A) கிளி, மயில்
   (B) முயல், நாய்
   (C) யானை, பசு
   (D) பசு, புலி

40. “முத்துராமலிங்கர் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிவருகிறது உதடுகளில் இருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மையெனப் பட்டதை மறைக்காமல் பேசிவிடுவது அவர் வழக்கம்” என்று தேவரை பாராட்டியவர் ............
   (A) இராஜாஜி
   (B) பெரியார்
   (C) காமராசர்
   (D) அண்ணா

41. முத்துராமலிங்கர் சிறைவைக்கப்பட்ட ‘தாமோ’ சிறை எங்குள்ளது?
   (A) உத்திரப்பிரதேசம்
   (B) மேற்குவங்காளம்
   (C) மத்தியப் பிரதேசம்
   (D) ராஜஸ்தான்

42. வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடலைத் தொகுத்து நூலாக வெளியிட்டவர் ............

(A) ந. முத்துசாமி
(B) சு. சக்திவேல்
(C) வானமாமலை
(D) கி. ராஜநாராயணன்

43. ................என்ற மன்னனின் செவிலித்தாயாக விளங்கியவர் காவற்பெண்டு என்னும் பெண்பாற்புலவர்

(A) கரிகாலச் சோழன்
(B) தொண்டைமான் இளந்திரையன்
(C) நெடுங்கிள்ளி
(D) கோப்பெரும் நற்கிள்ளி

44. நன்கு வளர்ந்த கரடி முடியின் எடை -------------- இருக்கும்

(A) 250கி
(B) 120கி
(C) 150கி
(D) 160கி

45. தனக்கான உணவை வேட்டையாடியபின்பு வேறு எந்த உணவையும் வேட்டையாடாத விலங்கு .........

(A) புலி
(B) சிங்கம்
(C) மான்
(D) கரடி

46. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் ............

(A) திருநெல்வேலி
(B) மதுரை
(C) கோவை
(D) திருச்சி

47. முத்துராமலிங்கர் இம்மண்ணுலகில் வாழ்ந்த நாள்கள் -------------

(A) 200,75
(B) 20,100
(C) 20,120
(D) 20,150

48. மதுரை நூற்பு ஆலை போராட்டத்தில் தோழர் ஜீவானந்தத்துடன் இணைந்து முத்துராமலிங்கர் போராட்டம் நடத்திய ஆண்டு ...............
   (A) 1937
   (B) 1946
   (C) 1939
   (D) 1938

49. உழவர்களின் நலன்காக்க எங்கு மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தினார் முத்துராமலிங்கர்?
   (A) மதுரை
   (B) சிவகங்கை
   (C) இராமநாதபுரம்
   (D) இராசபாளையம்

50. முத்துராமலிங்கரின் பேச்சு விடுதலைப்போருக்கு மிகவும் உதவும் என்று கூறியவர் ...
   (A) அறிஞர் அண்ணா
   (B) தந்தை பெரியார்
   (C) காமராசர்
   (D) இராஜாஜி

51. முத்துராமலிங்கர் பாரதமாதா கூட்டுறவு பண்டக சாலையை ஏற்படுத்திய இடம் ......
   (A) கமுதி
   (B) சாயல்குடி
   (C) பசும்பொன்
   (D) மதுரை

52. முத்துராமலிங்கர் .............. கோவில் நுழைவு போராட்டம் நடத்தத் திட்டமிட்டார்
   (A) திருச்செந்தூர் முருகன் கோவில்
   (B) மதுரை வைத்தியநாத ஐயர் கோவில்
   (C) சென்னை பார்த்தசாரதி பெருமாள் கோவில்
   (D) பழனி முருகன் கோவில்

53. முத்துராமலிங்கர் இராமநாதபுரத்தில் படித்துக் கொண்டிருந்த போது அவ்வூரில் ..........நோய் பரவியதால் அவரின் படிப்பு பாதியில் நின்றது.
(A) அம்மைநோய்
(B) காலரா
(C) மஞ்சள்காமாலை
(D) பிளேக்

54. முத்துராமலிங்கருக்கு நடுவணரசு தபால்தலை வெளியிட்ட ஆண்டு ..........
(A) 1995
(B) 1993
(C) 1996
(D) 1998

55. ‘பண்புள்ள விலங்கு’ என்று அழைக்கப்படும் விலங்கு எது?
(A) யானை
(B) புலி
(C) கரடி
(D) சிங்கம்

56. சிறந்த கவிதைகளைத்தொகுத்து ‘கொங்குதேர் வாழ்க்கை’ என்னம் நூலாக எழுதியவர்......
(A) தாராபாரதி
(B) கோமகள்
(C) ராஜமார்த்தாண்டன்
(D) கி. ராஜநாராயணன்

57. ராஜமார்த்தாண்டன் அவர்களுக்கு ‘ராஜமார்த்தாண்டன் கவிதைகள்’ என்ற நூலுக்காக எந்த பரிசு கிடைத்தது?
(A) ஞானபீட விருது
(B) சாகித்திய அகாடமி விருது
(C) புக்கர் விருது
(D) தமிழ் வளர்ச்சித்துறை பரிசு

58. இசைப்பாடல் இலக்கியம் என்றழைக்கப்படுவது..............
(A) நற்றிணை
(B) குறுந்தொகை
(C) திருக்குறள்
(D) பரிபாடல்

59. அருள்நெறி அறிவைத் தரலாகும் அதுவே தமிழன் குரலாகும் என்று பாடிய கவிஞர்............

(A) கவிஞர் முத்தரையன்

(B) கவிஞர் தாராபாரதி

(C) நாமக்கல்கவி

(D) முடியரசன்

60. வாயினால் பேசப்பட்டு பிறரால் உணரப்படுவது ............. ஆகும்.

(A) எழுத்து மொழி

(B) பேச்சுமொழி

(C) செய்கைமொழி

(D) உலகமொழ

61. எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும் என்று பாடியவர் ...........

(A) பாரதியார்

(B) பாரதிதாசன்

(C) கவிமணி

(D) முடியரசன்

62. மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்கள்

(A) வட்டார மொழி

(B) எழுத்துமொழி

(C) பேச்சுமொழி

(D) இலக்கிய மொழி

63. இராபி சேதுப்பிள்ளையின் சாகித்திய அகாடமி விருது பெற்ற முதல் நூல் ..........

(A) ஊரும் பேரும்

(B) ஆற்றங்கரையினிலே

(C) கடற்கரையினிலே

(D) தமிழின்பம்

64. ‘பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்தநிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவையே அன்றி வேறுவகை மொழி நிலைகளும் உண்டு எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும்’ என்று கூறியவர்
(A) மயிலை சீனி.வேங்கடசாமி
(B) திரு.வி.க
(C) டாக்டர் மு.வ
(D) விஜயலட்சுமி பண்டிட்

65. மதுரையில் நூற்பாலை தொழிலாளர்களுக்கு ஆதரவாக நடைபெற்ற போராட்டத்தில் முத்துராமலிங்கத் தேவர் எத்தனைத் திங்கள் சிறை தண்டனை பெற்றார்?
(A) ஏழு
(B) மூன்று
(C) ஆறு
(D) எட்டு

66. ஆங்கிலத்தில் ‘ஆலன்’ என்பவர் இயற்றிய அறிவு நூல்களில் ஒன்றை ‘மனம்போல் வாழ்வு’ என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
(A) ரா.பி. சேதுப்பிள்ளை
(B) வ.உ.சி
(C) கவிமணி
(D) நாமக்கல் கவி

67. வ.உ.சி சிதம்பரனார் பேசுவதாக அமைந்த இராபி சேதுப்பிள்ளை எழுதிய நூல் .......
(A) தமிழ் விருந்து
(B) ஆற்றங்கரையினிலே
(C) கடற்கரையினிலே
(D) மேடைப்பேச்சு

68. இரவில் மட்டும் வேட்டையாடும் தன்மை கொண்ட விலங்கு எது?
(A) யானை
(B) சிங்கம்
(C) புலி
(D) கரடி

69. நாள் ஒன்றுக்கு யானை எத்தனை கிலோ புல், இலை, தழைகளை உணவாக உண்ணும்.
   (A) 210 கிலோ
   (B) 250 கிலோ
   (C) 200 கிலோ
   (D) 230 கிலோ

70. முண்டத்துறை புலிகள் காப்பகம்__________சதுரகிலோமீட்டர் பரப்புடையது.
   (A) 895 சதுர கிலோ மீட்டர்
   (B) 800 சதுர கிலோ மீட்டர்
   (C) 795 சதுர கிலோ மீட்டர்
   (D) 995 சதுர கிலோ மீட்டர்

71. செந்தமிழும் கொடுந்தமிழும் என்னும் நூலை இயற்றியவர் யார்?
   (A) பாரதியார்
   (B) இரா.பி. சேது
   (C) பாரதிதாசன்
   (D) வ.உ.சிதம்பரனார்

72. முத்துராமலிங்கர் மறைந்த நாள் ...............
   (A) 6.9.1963
   (B) 9.6.1963
   (C) 30.10.1962
   (D) 30.10.1963

73. முத்துராமலிங்கர் முதன்முதலில் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஆண்டு .......
   (A) 1946
   (B) 1938
   (C) 1937
   (D) 1952

74. முத்துராமலிங்கர் தொடக்ககல்வி பயின்ற இடம் .............
   (A) பசும்பொன்
   (B) மதுரை
   (C) சாயல்குடி
   (D) கமுதி

75. பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடியவர் ----------------
   (A) திரு.வி.க
   (B) முத்துராமலிங்கர்
   (C) காமராசர்
   (D) பெரியார்

76. முத்துராமலிங்கரின் வேண்டுகோளுக்கிணங்க நேதாஜி ..........க்கு 6.9.1939 அன்று வருகை புரிந்தார்
   (A) சாயல்குடி
   (B) மதுரை
   (C) வேலூர்
   (D) சென்னை

77. தகுதி வழக்கு எத்தனை வகைப்படும்
   (A) 4
   (B) 3
   (C) 2
   (D) 5

78. எதை, எவற்றை, யாரை என்னும் வினாக்களுக்கு விடையாக வருவது ............
   (A) பயனிலை
   (B) செயப்படுபொருள்
   (C) வினையடை
   (D) எழுவாய்

79. மகர குறுக்கம் அல்லாத சொல்லைக் கண்டறிக.
   (A) மருண்ம்
   (B) பணம் வந்தது
   (C) பணம் கிடைத்தது
   (D) போன்ம்

80. குழந்தை வரைந்தது பறவைகளை மட்டுமே
   வானம் தானாக உருவானது - இக்கவிதையின் ஆசிரியர் யார்?
   (A) ராஜமார்த்தாண்டன்
   (B) தாராபாரதி
   (C) கலாப்ரியா
   (D) ராஜலட்சுமி

81. நெஞ்சில் உரமுமின்றி நேர்மை திறமுமின்றி வஞ்சனை செய்வாரடீ – என்று பாடிய கவிஞர்
(A) நாமக்கல் கவி
(B) வாணிதாசன்
(C) பாரதிதாசன்
(D) பாரதியார்

82. பாயக் காண்பது சுதந்திரவெள்ளம்
பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம் - என்று நாம் பாடும் நாள் எந்நாளோ? என்று உருக்கமாகப் பேசியவர் யார்?
(A) சுப்பிரமணியசிவா
(B) இராஜாஜி
(C) பாரதியார்
(D) வ. உ. சிதம்பரனார்

83. முத்துராமலிங்கர் முதன்முதலில் உரையாற்றிய இடம் சாயல்குடி. இவர் அங்கு எத்தனை மணிநேரம் உரையாற்றினார்?
(A) ஏழு
(B) ஐந்து
(C) ஆறு
(D) மூன்று

84. கொப்புகள் விலக்கி கொத்துக் கொத்தாய் கருவேலங்காய் பறித்துப் போடும் மேய்ப்பனை ஒருநாளும் சிராய்ப்பதில்லை கருவமுட்கள் – இக்கவிதையின் ஆசிரியர் யார்?
(A) கலாப்ரியா
(B) மலேசியக் கவிஞர் முத்தரையனார்
(C) கவிஞர் அறிவுமதி
(D) இளந்திரையன்

85. சரியான இணையைக் கண்டறிக

| | | |
|---|---|---|
| 1. பேச்சாற்றல் | - | BALLAD |
| 2. துணிவு | - | COURAGE |
| 3. முழக்கம் | - | SLOGAN |
| 4. கதைப்பாடல் | - | ELOCUTION |

(A) 2, 3 மட்டும் சரி
(B) அனைத்தும்
(C) 1, 2 மட்டும்
(D) 1, 4 மட்டும்

86. முத்துராமலிங்கரின் முயற்சியால் குற்றப்பரம்பரைச் சட்டம் நீக்கப்பட்ட ஆண்டு ........
   (A) 1937
   (B) 1948
   (C) 1938
   (D) 1947

87. இன்பம் பொழிகிற வானொலியாம் எங்கள் தமிழெனும் தேன்மொழியாம் - என்று பாடியவர்
   (A) கவிமணி
   (B) தாராபாரதி
   (C) நாமக்கல்கவி
   (D) முடியரசன்

88. ஒன்றல்ல இரண்டல்ல தம்பி ஒப்புமையில்லாத அற்புதம் தமிழ்நாட்டில் - என்று பாடியவர்
   (A) உடுமலை நாராயணகவி
   (B) ஈரோடு தமிழன்பன்
   (C) பட்டுக்கோட்டை கவிஞர்
   (D) பாரதிதாசன்

89. பொருந்தாத சொல்லைத் தேர்ந்தெடு(குற்றியலுகரம்)
   (A) விடு
   (B) ஆறு
   (C) வீடு
   (D) அரசு

90. ஒலியியல் என்ற சொல்லின் சரியான தமிழாக்கம் தருக
   (A) ANCHOR
   (B) ORTHOGRAPHY
   (C) STORM
   (D) PHONOLOGY

91. ஆசிய யானைகளில் ஆண் - பெண் யானைகளை வேறுபடுத்துவது ........
   (A) காது
   (B) கண்
   (C) தந்தம்
   (D) வால்

92. காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடாக குறிக்கப்படும் விலங்கு ............
   (A) மான்
   (B) சிங்கம்
   (C) யானை
   (D) புலி

93. பூட்டுங்கதவுகள் - பிரித்து எழுதுக.
   (A) பூட்டு + கதவுகள்
   (B) பூட்டும் + கதவுகள்
   (C) பூட்டிய + கதவுகள்
   (D) பூட்டின் + கதவுகள்

94. வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடலைத் தொகுத்து நூலாக வெளியிட்டவர் ............
   (A) ந. முத்துசாமி
   (B) சு. சக்திவேல்
   (C) வானமாமலை
   (D) கி. ராஜநாராயணன்

95. கட்டபொம்மு கதைப்பாடலில் பாஞ்சாலக்குறிச்சியின் நாட்டின் வளத்தைக் கூறி விளையாடியது ............
   (A) காகம்
   (B) மயில்
   (C) குயில்
   (D) குரங்கு

96. கேட்கும் ஆற்றல், மோப்ப ஆற்றல் மிகுந்தும் உள்ள விலங்கு.
   (A) யானை
   (B) புலி
   (C) கரடி
   (D) சிங்கம்

97. காந்தியக் கவிஞர் என்று புகழப்படுபவர் ..................
   (A) பட்டுக்கோட்டை கவிஞர்
   (B) நாமக்கல் கவிஞர்
   (C) உடுமலை நாராயணகவி
   (D) தாராபாரதி

98. அழகு மிகுந்த மானாக சொல்லப்படுவது ............

(A) புள்ளிமான்

(B) மிளாமான்

(C) வெளிமான்

(D) சருகுமான்

99. சுட்ட பழங்கள் என்பவை ..............

(A) வேகவைக்கப்பட்ட பழங்கள்

(B) மண் ஒட்டிய பழங்கள்

(C) சுடப்படாத பழங்கள்

(D) சூடான பழங்கள்

100. 'அமுதும் தேனும்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) ராஜமார்த்தாண்டன்

(B) ஈரோடு தமிழன்பன்

(C) முடியரசன்

(D) சுரதா

******